International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் மரபும் வரலாறும்

**முனைவர் த. ஆனந்தன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், நாமக்கல் – 637205

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழரின் பண்பாட்டு மரபில் நிகழ்த்துக் கலைகள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. மனிதனின் வாழ்வியல், சமய நம்பிக்கைகள், சமூகப் பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தும் முக்கியமான ஊடகங்களாக இக்கலைகள் விளங்குகின்றன. சங்க இலக்கியம் தொடங்கி நவீன காலம் வரை பல்வேறு வடிவங்களில் நிகழ்த்துக் கலைகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இவ்வாய்வு, பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் தோற்றம், வளர்ச்சி, மரபு, இலக்கியச் சான்றுகள் மற்றும் அவற்றின் சமூக-பண்பாட்டு முக்கியத்துவத்தை ஆராய்கிறது. விளக்கவியல், வரலாற்று மற்றும் ஒப்பாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், நாட்டுப்புறவியல் நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வுத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குரவைக்கூத்து, வெறியாட்டு, துணங்கைக்கூத்து, வள்ளிக்கூத்து, கயிற்றாடல் உள்ளிட்ட நிகழ்த்துக் கலைகளின் இலக்கியப் பதிவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் இன்றைய நிலை, பாதுகாப்பின் அவசியம், அரசு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவையும் விளக்கப்படுகின்றன. உலகமயமாக்கல் மற்றும் நவீன ஊடக வளர்ச்சியால் பல நிகழ்த்துக் கலைகள் மறையும் அபாயத்தில் உள்ள சூழலில், அவற்றை ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லுதல் இன்றியமையாத பண்பாட்டுப் பொறுப்பாகும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**முதன்மைச்சொற்கள்:** நிகழ்த்துக் கலைகள், பாரம்பரியம், நாட்டுப்புறக் கலை, சங்க இலக்கியம், அருவப் பண்பாட்டு மரபு.

**ஆய்வுச் சிக்கல் (Research Problem)**

தமிழர் பண்பாட்டின் அடையாளங்களாக விளங்கும் பாரம்பரிய நிகழ்த்துக் கலைகள் பல நூற்றாண்டுகளாக சமூக வாழ்வுடன் இணைந்து வளர்ந்துள்ளன. இருப்பினும், உலகமயமாக்கல், நகரமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி, திரைப்படம் மற்றும் மின்னணு ஊடகங்களின் தாக்கம் ஆகிய காரணங்களால் பல நிகழ்த்துக் கலைகள் இன்று மறையும் நிலையில் உள்ளன. சில கலைகள் பொழுதுபோக்கு நிகழ்வுகளாக மட்டுமே சுருங்கிவிட்டன; அவற்றின் சமூக, சமய, பண்பாட்டு நோக்கங்கள் மங்கியுள்ளன. மேலும், சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற நிகழ்த்துக் கலைகளுக்கும் இன்றைய நிகழ்த்துக்

கலைகளுக்கும் இடையிலான தொடர்ச்சி, மாற்றம் மற்றும் பண்பாட்டு பரிணாமம் குறித்த ஆய்வுகள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே, தமிழரின் பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் மரபு, வரலாறு, இலக்கியச் சான்றுகள் மற்றும் இன்றைய நிலையை ஆய்வியல் நோக்கில் ஆராய்வதே இவ்வாய்வின் முக்கியச் சிக்கலாகும்.

**ஆய்வின் நோக்கங்கள் (Objectives)**

- பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விளக்குதல்.
- சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நிகழ்த்துக் கலைகளை அடையாளம் காணுதல்.
- நிகழ்த்துக் கலைகளின் சமூக, சமய மற்றும் பண்பாட்டு பங்களிப்பை எடுத்துரைத்தல்.
- பழங்கால மற்றும் நவீன நிகழ்த்துக் கலைகளின் மாற்றங்களை ஒப்பீடு செய்தல்.
- பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துதல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

பாரம்பரிய நிகழ்த்துக் கலைகள் தமிழரின் பண்பாட்டு மரபின் உயிரோட்டமிக்க வெளிப் பாடுகளாகும். இவ்வாய்வு நிகழ்த்துக் கலைகளின் வரலாற்றுப் பின்னணி, சமூகப் பயன்பாடு, இலக்கிய ஆதாரங்கள் மற்றும் பண்பாட்டு மதிப்புகளை ஒருங்கிணைத்து விளக்குவதன் மூலம் எதிர்கால ஆய்வுகளுக்கு அடித்தளமாக அமைகிறது. மேலும், அழிந்து வரும் நாட்டுப்புறக்கலைகளைப் பாதுகாப் பதற்கும், இளைய தலைமுறையினரிடம் அவற்றைப் பரப்புவதற்கும் இவ்வாய்வு பயனளிக்கும்.

**ஆய்வுமுறை (Research Methodology)**

இவ்வாய்வு விளக்கவியல் (Descriptive Method), வரலாற்று ஆய்வுமுறை (Historical Method) மற்றும் ஒப்பாய்வு (Comparative Method) ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், காப்பியங் கள், நாட்டுப்புறவியல் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் துணைநூல்கள் ஆகியவற்றிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் மற்றும் பண்பாட்டியல் அணுகுமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முன்னுரை**

மனிதனிடம் வெளிப்படுகின்ற செயல்பாடுகள் அனைத்தும் கலைகளே. அதாவது அவன் வெளிப்படுத்தும் பேச்சு, நடத்தை, செயல் முதலான அனைத்தையும் கலைகள் என்று கூறலாம். எனவே மனிதனுடை வாழ்வானது கலைமயமானதாகவே கருதப்படுகிறது. மக்கள் தங்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்ற செயல் பாடுகள் அனைத்தும் கலைகளாக அமைகின்றன. ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் நிகழ்த்துக் கலை ஒருவகை யாகும். நிகழ்த்துக்கலை என்பது கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவனவாகும். பாமர மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாதக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள் ஆகும். இவை மக்களுக்கு மகிழ்ச்சி எனும் கனியைக் கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்தி களைத் தரும் ஊடகங்களாகவும் நிகழ்த்துக் கலை திகழ்கின்றன. அந்த வகையில் நிகழ்த்துக் கலை குறித்த செய்திகள் இக்கட்டுரையில் ஆய்வுச் செய்யப்படுகிறது.

**நிகழ்த்துக் கலைகள் பற்றிய விளக்கம்**

நிகழ்த்துக் கலைகள் என்பது நிகழ்ச்சி அமைப்பாக மக்களுக்கு நிகழ்த்திக் காட்டப் படும் கலைகள் நிகழ்த்துக் கலைகள் எனப்படும். நிகழ்த்துக் கலைகள் என்பவை மக்களின் வாழ்வோடு கலந்து பண்பாட்டின் கூறுகளை வீரியத்துடன் வெளிப்படுத்துபவை. தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு நிகழ்த்துக்கலைகள் பற்றிய புரிதல் தேவை. ஏனெனில் அவை மரபுவழி நிகழ்த்தப் படுபவை. இக்கலைகள் தமக்கென்ற மரபு வழிப்பண்பாட்டு எல்லைகளையும் மரபுவழிப் பட்ட பார்வையாளர்களையும் கொண்டவை. எடுத்துக்காட்டாக ***புலி வேடம், பகல்வேடம் புனைதல், உறுமிக் கோமாளி ஆட்டம், சிலம்பாட்டம், கும்மியாட்டம், கோலாட்டம், களியலடித்தல், பொடிகழி ஆட்டம், ஆலி ஆட்டம், வேதாள ஆட்டம், சக்கை ஆட்டம், உடுக்கடிப்பாட்டு, கரகாட்டம், காவடியாட்டம், தேவராட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், சாமியாட்டம்,***

***காளியாட்டம், சேர்வையாட்டம், உறியடித்தல், கழைக்கூத்து வில்லுப்பாட்டு, பாவைக் கூத்து, தெருக்கூத்து, பாரதம் படித்தல், கணியான் கூத்து, கதைப்பாட்டுப் படித்தல், கோலாட்டம்*** முதலானவற்றைக் கூறலாம். இவையனைத்தும் பயிற்சி பெற்ற கலைஞர் களால் மக்கள் முன் நிகழ்த்தப் படுபவை யாகும்.

**சங்க கால நிகழ்த்துக் கலைகளின் பெயர்கள்**

சங்க காலச் சமூகத்தில் மக்களின் பொழுதுபோக்கு நிகழ்வாக நிகழ்த்தப்பட்ட கலைகளை நிகழ்த்துக் கலைகள் எனலாம். நிகழ்த்துக்கலைகளான ஆடல், கூத்து, நாட்டியம், நாடகம், இசை, ஆகியவை சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்தில் ***வாயில் கூத்து, துணங்கை கூத்து, வெறியாட்டு, குரவைக்கூத்து, வள்ளிக் கூத்து, துடிக்கூத்து, வாள் அமலைக்கூத்து, கழல்நிலைக்கூத்து. பாவைக்கூத்து, தோல் பாவைக்கூத்து, கழைக்கூத்து, மல்லாடல், கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலக்கூத்து, உரற்கூத்து*** போன்றவை நிகழ்த்துக் கலை களாக இடம் பெற்றுள்ளன.

பெருங்கதை என்ற நூலில்

**வாயிற் கூத்தும் சேரிப் பாடலும்**
**கோயில் நாடகக் குழுக்களும்**

(பெருங்கதை:முதல்காண்டம்: வரி 88-89.)

என வரும் சொற்றொடர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கூத்து நடை பெற்றதையும் நாடகம் மற்றும் நாடகக் குழுவினர் இருந்ததையும் குறிப்பிடுகின்றது.

**நிகழ்த்துக் கலையின் மரபுகள்**

நாட்டுப்புற நிகழ்த்துகலைகள் என்பன நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையவையாகும். அவை பல்வேறு சமூக, வெளிப்பாட்டினால் உருவாகின்றன. அவ்வுணர்வு வெளிப்பாடுகளுக்கு ஏற்ப மொழிவழி இசையும் பாடலும் உருவாகி அதற்கேற்ப பலவகையான உடல் இயக்க அசைவுகளை உருவாக்குகின்றன. இவ்வுடல் இயக்க அசைவுகள் பாடல் இசைக்கேற்ப முறைப்படுத்தப்படும்பொழுது, ஆட்டங்கள் உருவாகின்றன. ஆட்டத்தின் இயக்கச் செயற்பாட்டு நிகழ்வுகள் பல்வேறு சடங்கு, கலை, பொருளாதாரம் மற்றும் செயற்கை சூழல்களுக்கு ஏற்ப சமூக மதிப்பு அடிப்படையில் நாட்டுப்புற மக்களால் உருவாக்கப்படுவதால், அவற்றின் ஒட்டு மொத்தமான கலை நிகழ்வு அமைப்பை நாட்டுப்புற ஆட்டங்கள் அல்லது நாட்டுப்புற நிகழ்த்துகலைகள் என்பது பொருத்தமாகும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசை இசையாகிறது. கற்கள் முறையாக அடுக்கப்படும் பொது கட்டிடக்கலை உருவாகிறது. வடிவங்கள் வகுத்துச் சீர்படுத்தப்படும்போது சிற்பக்கலை ஆகிறது. கோடுகள் ஒன்றிணைக்கப்படும் போது ஓவியக்கலை உருவாகிறது. கற்பனை முறைப்படுத்தப்படும்பொழுது கவிதைக் கலையாகிறது. அவ்வாறே ஒழுங்குபடுத்தப் பட்ட அசைவுகள் நடனக்கலை ஆகிறது. இக்கருத்தின் அடிப்படையிலேயே நாட்டுப்புற நிகழ்த்து கலைகளும் உருவாகின்றன. எனவே அவை தனித்தன்மை கொண்டவை.

நாட்டுப்புற ஆட்டங்களின் அமைப்பும் பொருளும் வேறுபட்டவை. அவை மக்கள் வாழும் சமூகத்தின் ஒரு கூறாக அமைந்தாலும் அவற்றை ஆய்வு செய்யும் போது, எங்கோ தொலைதூரத்திலுள்ள ஒரு சமூகத்தை ஆய்வு செய்ய பயன்படுத்தும் உற்று நோக்கல் உத்திகளையும், ஆய்வு நெறிமுறைகளையும் பயன்படுத்த வேண்டி யுள்ளது என்பது லெவிஸ்ட்ராஸ் என்பவரின் கருத்தாகும். இந்நிலை, நாட்டுப்புற நிகழ்த்து கலைகள், பிற கலைகளிலிருந்து விலகி வேறுபட்டு நிற்கின்றன என்பதைக் காட்டுகிறது என்கிறார் சுதானந்தா. **(ஆட்டமும் அமைப்பும்: 1991: 9)**

இந்நிலைக்கு இருவகை காரணங்கள் கூறப் படுகின்றன ஒரு சிலர், கிராமியக் கலைகள் மிகப்பழமையானவை என்கின்றனர். அதாவது, அக்கலைகள் இடத்தால் நமக்கு அண்மை யிலிருந்தாலும், காலத்தால் மிகவும் தொலைவிலுள்ளவை என்பதாகும். ஒரு சிலர், எந்த ஒரு சமூகத்தில் நடைபெறும் சமூக, மனச்செயல்களின் வடிவங்களும் உணர்நிலைக்கு அப்பாலுள்ள கூட்டுப்பண்பை அடிப்படையாகக் கொண்டவை என்பர். **(Levistreuss: Structural Anthropology: 1979:360)** நாட்டுப்புற நிகழ்த்து கலைகள், உணர்தற்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ள குழுப்பண் பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை என்பதை இக்கருத்தின் வாயிலாக அறியலாம்.

மேற்குறிப்பிட்ட இருவகை காரணங்களுள் எது உண்மையானதாக இருந்தாலும் நாட்டுப்

புறக்கலைகள் தனித்தன்மை கொண்டவை என்பதிலும் அவை அரிதாக உணரத்தக்க நிலையிலுள்ளன என்பதிலும் கருத்து வேறு பாடிருக்க முடியாது. இவ்வாறு தனித்தன்மை கொண்ட நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் கதை, பாட்டு, பேச்சு, நடிப்பு, தாளம், ஒப்பனை முதலிய பல்ஈறு கூறுகளைத் தன்னுள் கொண்டு விளங்குகின்றன. இவை இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபட்டு விளங்கக் கூடிய தன்மையைப் பெறுகின்றன. அவற்றோடு தொடர்புடைய நாட்டுப்புற மக்களின் பண்பாட்டு நிலைகளைப் பிரதி பலிக்கும் கண்ணாடிகளாக அமைகின்றன.

**பழங்கால நிகழ்த்துக் கலைக் குறித்த இலக்கியச் சான்றுகள்**

கூத்து என்பது சங்ககால தமிழ் மக்கள் விரும்பும் ஒரு பழங்கால நிகழ்த்து கலையாகும். இது தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு நாட்டுப்புறக் கலை. கூத்து கலைஞர்கள் நடனம் மற்றும் இசையுடன் கூடிய பாடல் களை இதிகாசங்களைக் கதைசொல்லும் போது நிகழ்த்துகிறார்கள். அந்த வகையில் ***துணங்கை கூத்து, வெறியாட்டு, குரவைக் கூத்து, வள்ளிக்கூத்து, கயிற்றாடல், வேட்டு வரி, சாக்கைக் கூத்து, கழாய்க்கூத்து, தோற் பாவைக் கூத்து, விதூடகக் கூத்து, வென்றிக் கூத்து, வசைக் கூத்து, விநோதக்*** கூத்து ஆகிய கூத்து வகைகள் பழங்கால கலை யின் வடிவமாக பல்வேறு இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கிறது. அதனைக் குறித்த சில செய்திகளை கீழ்வரும் பகுதியில் காணலாம்.

**குரவைக் கூத்து**

குரவைக்கூத்து, பழங்காலத்தில் தமிழரிடையே அதிலும் சிறப்பாகக் குறிஞ்சி சில மக்களிடையே புகழ்பெற்று விளங்கியது, இக்கூத்தில் சாதரணமாக ஏழு அல்லது ஒன்பது பேர்கள் கைக் கோர்த்து வட்டமாக நின்று ஆடிப்பாடுவார்கள். இதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்வார்கள். முருகனைப் புகழ்ந்து குறிஞ்சி நில மக்கள் ஆடும் குரவைக்கூத்தினைச் சிலப்பதிகாரத்தில் உள்ள வஞ்சிச் காண்டப் பிரிவில் குன்றக் குரவை என்ற காதையில் இளங்கோவடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**வெறியாடல்**

முருகனை நினைத்து வேலன் என்பான் ஆடும் ஆட்டத்திற்கு வெறியாடல் அல்லது வெறிக்கூத்து என்று அழைப்பர். இத்தகைய கூத்தினைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத் திலும் காணப்படுகிறது. இவ்வெறியாடலை,

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்**
(தொல்:பொருள்:அகத்:நூ-63)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**துணங்கைக் கூத்து**

கடுமையான முகத் தோற்றம் கொண்ட ஒரு பெண் தனது வீரம் விளங்க முழங்கைகளால் இருப்பை அடித்தபடியே ஆடும் ஆட்டத்தைத் ‘துணங்கைக் கூத்து’ என்று கூறுவர். இத்தகைய ஆடலைச் சிலப்பதிகாரத்தில்

**துணங்கையர், குரவையர் அணங்க**
**எழுந்து ஆடி** (இந்திர விழவு:வரி-70)

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**வள்ளிக் கூத்து**

வள்ளிக்கூத்து சாதாரண மக்களுக்கே உரிய தாகும். இது ஆண்களும், பெண்களும் கூடி மகிழ்ந்து ஆடக்கூடியக் கூத்தாகும். இக் கூத்தில் நாட்டுக்கு வெற்றியையும், வளத்தை யும் கொடுத்த வள்ளியைப் புகழ்ந்து பாடுவர். பத்துப்பாட்டில் ஒன்றான பெரும் பாணாற்றுப்படை வள்ளிக்கூத்தை பற்றி,

**வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடுபல கழிந்த பின்றை நீடுகுலை**
(பெரும்பாண்: வரி 370-371)

என்று குறிப்பிடுகின்றது.

**கயிற்றாடல்**

உயரமான கம்பில் கயிற்றைக் கட்டி, அதில் நின்று கொண்டு தாளத்திற்குத் தக்கவாறு ஒருவன் ஆடும் ஆட்டத்தைக் ‘கயிற்றாடல்’ என்று கூறுவர். இந்த ஆடலைக் குறிஞ்சிப் பாட்டு,

**சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி**
**அரிக்கூட்டின் இயங்கக் கறங்க ஆடுமகள்**
**கயிறூர் பாணியில் தளருஞ் சாரல்**
(குறிஞ்சிப் பாட்டு:வரி192 -124)

என்று குறிப்பிடுகின்றது.

**இன்றையக் கலைகள்**

இன்றையக் காலத்தில் **‘தெருக் கூத்து’** சில ஊர்களில் அரங்கேற்றம் செய்கிறார்கள். ஆனால் அவை அன்றையக் காலங்களில் வெளிப்பட்ட கருத்துக்களைப் போன்று

இல்லாமால், மக்களை சிரிக்க வைக்கும் நோக்கில் மட்டுமே அரங்கேற்றம் செய்கிறார் கள். மேலும் சில கருத்துக்கள் ஆபாச மாகவும் நாகரீகமற்ற முறையிலும் தன் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். இதனை மக்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று தமிழகத்தில் நடைபெறும் தேர்த் திருவிழா, ஊர்த் திருவிழா, அரசியல் மாநாடு, கலாச்சார நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளில் ***கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காளியாட்டம், உறியடி, பாரதம் படித்தல், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கோலாட்டம்*** ஆகியவை கலைகளாக இடம்பெறுகின்றன.

தொலைக்காட்சி உலகம் தழுவிய ஒரு கருவியாக உள்ளது. பல மொழி பேசப்படும் நாடுகளிலும் ஒரு குறிப்பிட்ட மொழியினர் தயாரிக்கும் நிகழ்ச்சியைப் பார்க்கிறார்கள். உலகம் அனைத்தும் ஒன்றாகும் நிலையினை இத்தொலைக்காட்சி உருவாக்கித் தருகின்றது. அந்த நிலையில் எல்லா மொழியினரும் புரிந்து கொள்ள வசதியாகச் சைகை மொழியை ஒளிபரப்ப இத்தொலைக்காட்சித் துணையாகின்றது. இத்தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை செயற்க்கைக் கோள் வழியாக உலகம் முழுவதும் அஞ்சல் செய்கின்றனர். இதனால் ஓர் உலக மனப் பான்மையும், ஒற்றுமை எண்ணமும் வளர்கின்றது. கருத்துப் பகிற்விற்கு இந்தத் தொலைக்காட்சி, மிகவும் பயனுடைய சாதமாகத் திகழ்கின்றது. ஆகவே இன்றையத் தொலைக்காட்சிகளில் கலைகளை அனைத்தும் நாடக வடிவிலும், ஆடல் பாடல் வடிவிலும், பக்தியினை வெளிப்படுத்தும் பாங்கிலும், நகைச்சுவை வடிவத்திலும், வரலாற்றுச் செய்திகளை நடித்துக் காட்டும் நோக்கிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சிகளில் மக்கள் விரும்பும் நோக்கில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. ஆனால் கால மாற்றத்திற்கேற்ப கருத்துக் களும் வெளிப்பாடும் வேறுபடுகின்றன.

## முடிவுரை

இவ்வாறாக கலைகள் என்பவை மக்களின் வாழ்வோடு கலந்து பண்பாட்டின் கூறுகளை வீரியத்துடன் வெளிப்படுத்துபவையாக திகழ்கின்றது. தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு கலைகள் பற்றிய புரிதல் தேவையாகின்றது. ஏனெனில் அவை மரபு வழி நிகழ்த்தப்படுபவையாகும். இக்கலைகள் தமக்கென்ற மரபுவழிப்பண்பாட்டு எல்லை களையும் மரபுவழிப்பட்ட பார்வையாளர் களையும் கொண்டவையாக விளங்குகிறது. ஆகவே தமிழரின் நீண்ட நெடிய வரலாற்றையும் பண்பாட்டுப் பெருமையையும் ஒருங்கே காட்டும் கலைகளைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பது நமது கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. சுதானந்தா, ஆட்டமும் அமைப்பும் ஒரு நாட்டுப்புற நிகழ்கலைப் பற்றிய ஆய்வு, பக். 9.
2. லெவிஸ்ட்ராஸ், மானுடவியல் அமைப்பு, பக். 360.
3. பொ. வே. சோமசுந்தரம் பிள்ளை, பெருங்கதை, பக்.37.
4. தொல்காப்பியர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்), நூ. 63.
5. ஜெ.ஸ்ரீசந்திரன், சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், பக். 82.
6. எம்.ராதாகிருஷ்ணப் பிள்ளை, தமிழ் வளர்த்த கோயில்கள், பக். 92.
7. தினேஷ் குமார், குறிஞ்சிப்பாட்டு, பக். 453

## துணைநின்ற நூல்கள்.

1. பொ. வே. சோமசுந்தரம் பிள்ளை (உரையாசிரியர்), பெருங்கதை, கழக வெளியீடு, சென்னை, 1970.
2. பொ. வே. சோமசுந்தரனார் உரை, பத்துப் பாட்டு (பகுதி-1), கழக வெளியீடு, சென்னை, 1973.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கழக வெளியீடு, சென்னை, 1966.
4. பொ. வே. சோமசுந்தரனார் உரை, பத்துப் பாட்டு (பகுதி-2), கழக வெளியீடு, சென்னை, 1965.
5. டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சிலப்பதிகார மூலமும், அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், நான்காம் பதிப்பு, ஆகஸ்ட், 1994.
6. கா. அப்பாதுரை, உலக இலக்கியங்கள் (முதற் பகுதி), கழக வெளியீடு, சென்னை, 1961.